بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 6:11 ஷஃபான் 1431 பக்கங்கள் = 12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

## பாவங்களும் தண்டனைகளும்

*- மௌலவி K.L.M. இப்றாஹீம் மதனி M.A.*

இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட ஒரு சிலவற்றைத்தவிர அல்லாஹ் படைத்திருக்கும் அனைத்தும் மனிதன் அனுபவிப்பதற்கு ஆகுமாக்கப்பட்டவைகளே! இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டவைகளே அதிகம். ஹராமாக்கப்பட்டவைகள் மிகக்குறைவாகவே இருக்கின்றது. அதுவும் மனித சமுதாயத்திற்கு தேவையில்லாததே. அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

அல்லாஹ்வின் பெயர் கூறி (உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவற்றில்) அறுக்கப்பட்டதை நீங்கள் சாப்பிடாமலிருக்க என்ன (தடை) இருக்கிறது? நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டாலன்றி சாப்பிட உங்களுக்கு விலக்கப்பட்டவை எவை என்பதை அல்லாஹ் விவரித்துக் கூறியுள்ளான்... 6:119

தவறுகளை செய்வதால் மனிதன் ஆத்ம ரீதியிலும் உடல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் மறுமையிலும் பாதிக்கப்படுகின்றான். தவறுகளை விடுவதால் இவ்வளவு இலாபங்களை பெறுவதுடன் அல்லாஹ்வின் தடைகளை மீறாது அல்லாஹ்விற்கு கட்டுப்பட்ட நல்லடியானாகவும் கருதப்படுகின்றான். தவறுகளை விட்டு நடப்பதில்தான் மனிதனின் ஈருலக வெற்றியும் தங்கியிருக்கின்றது. ஆகவே ஒரு முஸ்லிம் ஹராமாக்கப்பட்டவைகளை முற்றாக தவிர்ந்து நடக்க வேண்டும். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

நீங்கள் தடுக்கப்பட்டுள்ளவற்றில் பெரும் பாவங்களை தவிர்த்து கொண்டால் உங்களுடைய குற்றங்களை நாம் மன்னிப்போம். உங்களை மதிப்புமிக்க இடங்களில் புகுத்துவோம். 4:31

இஸ்லாத்தில் ஏவப்பட்ட விஷயங்களில் மனிதன் வித்தியாசப்படுகின்றான். சிலருக்கு கடமையாகும் வணக்கம் சிலருக்கு கடமையாகுவதில்லை. உதாரணமாக, ஹஜ் மற்றும் ஜக்காத்தை நிறைவேற்றுவது எல்லா முஸ்லிம்களுக்கும் கடமையில்லை. ஆனால் தவறுகளைப் பொறுத்தவரை அதில் விதிவிலக்கில்லை நிர்பந்த மிகவும் அரிதான குறிப்பிட்ட நேரத்தை தவிர இஸ்லாம் தடுத்த அனைத்து தவறுகளையும் ஒவ்வொரு முஸ்லிமும் தன் வாழ்நாள் முழுக்க முற்றாக தவிர்ந்து கொள்ள வேண்டும்.

*தொடர்ச்சி 4 ம் பக்கம் பார்க்க ...*

## பொறுமையின் அவசியம்

**சுவனப்பாதை மாதஇதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430)**

*ஏழாவது ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை.*

*- A. G. முஹம்மது பைரோஸ்கான், கூத்தாநல்லூர். திருவாரூர் மாவட்டம்.*

கோபம், அவசரம், பதற்றம், துன்பம், வறுமை இவைகள் எல்லாவற்றையும் எதிர்கொள்ளும் எதிர்ப்பு சக்தியாக பொறுமை இருக்கிறது. ஒரு நாடோ, தேசமோ வறட்சியாலோ அல்லது இயற்கை சீற்றத்தாலோ பாதிக்கப்படும்போது, அந்த நாட்டின் வளர்ச்சி எவ்வளவு முக்கியமான ஒன்றாக இருக்கிறதோ, அதுபோல கோபமோ, ஆத்திரமோ வரும்போது பொறுமை அவசியமான ஒன்றாக இருக்கின்றது. இறைவன் மிகப்பெரிய பொறுமையாளன். மனிதர்கள் செய்யும் தவறுகளை அவர்கள் திருந்தும்வரை பொறுத்துக் கொள்ளுகிறான், நாம் எந்தநிலையில் இருக்கிறோம் என்பதை சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

இறைவன் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை சோதித்து கொண்டிருக்கின்றான், துன்பம், கஷ்டம் வரும் நேரங்களில் நாம் இறைவனையே திட்டிவிடுகின்றோம் நாங்கள் என்ன பாவம் செய்தோம்? எதற்காக எங்களை சோதிக்கிறாய்? என்று இறைவன் மீது கோபப்படுகின்றோம். இறைவன் சிலருக்கு அதிக அளவில் செல்வத்தைக் கொடுத்திருப்பான், ஆனால், ஒரு சிலரோ அடுத்த வேளை உணவிற்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள், ஏன் இத்தகைய நிலை, உதாரணத்திற்கு ஒரு கம்பெனியில் இருப்பவர்கள் அனைவருமே முதலாளிகளாக இருந்து விட்டால், மற்ற வேலைகளை யார் செய்வது. இதைபோலதான், இறைவன், அவரவர்களின் தகுதிக்கேற்ப ஏழை, செல்வந்தர்களாக படைக்கின்றான்.

இன்றைய சூழ்நிலையில் பணக்காரர்களாக இருப்பவர்கள் ஒரு சிலரோ அல்லது பெரும்பாலானவர்களோ இறைவனுக்கு நன்றி செலுத்த மறப்பதும், ஏழையாக இருப்பவர்கள் மட்டுமல்ல, துன்பம், கஷ்டம் வரும்போது இறைவனை திட்டுவது

### உள்ளே!

இயற்கை மார்க்கம் இஸ்லாமே – 6
சங்கதிகளும் இங்கிதங்களும் - 7
சிந்திக்க சில வரிகள் – 8
மணப்பெண் தேர்வு – 9
செய்தித்துளிகள் - 11
இறை நினைவுகள் - 12
அறிவுப் போட்டி - 12

சாதரணமாகிவிட்டது. இத்தகைய தருணத்தில் இறைவன் நம்மீது கோபப்பட்டால் என்னவாகும் என்பதை சற்று சிந்தித்து பார்க்க வேண்டும் 'எந்த துன்பம் ஏற்பட்டாலும் அல்லாஹ்வின் விருப்பத்தைக் கொண்டே தவிர இல்லை'. (அல்குர்ஆன் 54: 11) என்பதை பொறுமையோடு சகித்துக்கொண்டு வாழ்ந்தால், வாழ்க்கை இனிமையாகவும், எளிமையாகவும் இருக்கும்.

### சிறந்த வாழ்க்கைக்கு பொறுமை:

பொறுமையில்லாத மனிதன் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒவ்வொன்றையும் இழந்து கொண்டுதான் வருகிறான். இந்த உலகில் எத்தனை நபர்களை கடந்து வந்திருப்போம், வந்து கொண்டு இருக்கிறோம். ஒரு சிலரை பார்த்தாலே எளிதாக உணர்ந்து கொள்வோம், இவர் நல்லவர், இவர் கெட்டவர் என்று, எதைக்கொண்டு அறிகிறோம். அவரது குணத்தை வைத்து தானே தவிர அவரது உடல் அமைப்பை வைத்து அல்ல. குணம் என்பது நமது மனதிலிருந்து வரும் வெளிப்பாடு ஆகும், அப்படியிருக்கும் பட்சத்தில் கோபம் கொள்ளும் ஒரு மனிதரை பார்த்தால், அவரை கெட்டவராகதான் நினைக்க தோன்றும், இங்கு ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும், நாம் அவரை ஏன் கெட்டவராக கருதினோம், ஏனென்றால், அவரிடம் இருக்கும் கோபப்படக்கூடிய, நிதானமற்ற தன்மை அவரை கெட்டவராக காட்டுகிறது. ஆனால் உண்மையிலேயே நல்லவராக, ஏழைகளுக்கு உதவி செய்பவராக இருப்பார். கோபம் என்னும் தீய சக்தி தான் அவரை மாற்றிவிடுகிறது, கோபம் கொண்டு பேசுபவரை நாம் நெருங்க முடியாது, இதை ஏன் சொல்கிறோமென்றால், அவரிடமிருந்து வரும் வார்த்தைகள் நமது மனதை புண்படுத்தி விடுமோ என்ற பயம்.

இதுபோல எத்தனை முறை பொறுமையை இழந்து பெற்றோர்களிடமும், நண்பர்களிடமும், சகோதரர்களிடமும் கோபப்பட்டிருப்போம், அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் நம்மை எத்தகைய கண்ணோட்டத்தில் பார்த்திருப்பார்கள், எத்தனை நண்பர்களை நாம் இழந்திருப்போம். எத்தனை குடும்பங்கள் சண்டை, சச்சரவுகளால் பிரிந்திருக்கின்றன என்பதை உணர்ந்தால் நமக்கு பொறுமையின் அவசியம் புரியும். இதுவே ஒருவர் எல்லாவற்றிலும் பொறுமையை கடைப்பிடிப்பவராக இருந்தால், அவரிடம் இருந்து வரும் வார்த்தைகள் அன்பாகவும், அடுத்தவர்களின் மனதை நோகடிக்காமலும் இருக்கும், இந்த வார்த்தைகள் எங்கிருந்து வருகின்றன. ஆம் பொறுமையாளர்களின் மனதில் இருந்து மட்டுமே இத்தகைய வார்த்தைகள் வரும், அவர்களால் மட்டுமே, மற்றவர்களின் மனம் புண்படாத வண்ணம் நடந்து கொள்ள முடியும். இன்னும் சொல்லபோனால் வாழ்க்கையில் வெற்றி பெறுபவர்களும் இவர்களே!!

### எதையும் உருவாக்குவது பொறுமை:

நாம் எண்ணியதை அடைய முடியாவிட்டால், நம்மையும் மீறி நமது மனம் ஆதங்கப்படுகிறது. நிதானத்தை இழக்கின்றோம். நிதானமிழந்த எவனாவது பொறுமையை கடைப்பிடிப்பானா, என்றால் அது இயலாத விஷயம். எந்த விஷயத்தையும் சாதரணமாக எடுத்துக் கொண்டு செயல்படாமல், ஒன்றின் மீது மிகுந்த எதிர்ப்பார்ப்போடு செய்யும்போது, அதன் மீது அளவு கடந்த நம்பிக்கை வந்து விடுகின்றது, எப்படியும் அதனை அடைந்தே தீரவேண்டுமென்று அதிக ஈடுபாட்டோடு செயல்படுகின்றோம். இந்த மாதிரியான விஷயங்களை அவசரப்பட்டோ, பதற்றமடைந்தோ செயல்படுத்த முடியுமா? நிதானத்தோடு பொறுமையாக சிந்தித்து செயல்படுத்தினால் மட்டுமே நினைத்ததை அடையமுடியும்.

உதாரணமாக, ஒரு மண்பாண்டம் செய்யும் தொழிலாளியை எடுத்துக் கொண்டோமென்றால் நமக்கு புரிந்து விடும். மண்பாண்டம் செய்யும் ஒரு தொழிலாளி மண்பாண்டங்களை செய்ய முற்படுகின்றான் என்று வைத்துக் கொள்வோம். முதல் பானை அவன் எதிர் பார்த்த மாதிரி வரவில்லை என்றால், அதன் மீது உள்ள கோபத்தையும், ஆத்திரத்தையும் அடுத்த பானையின் மீது காட்டினானென்றால், அவன் நினைத்தபடி ஒரு மண்பாண்டம் கூட செய்ய இயலாது.

இதே ஒருவன் பொறுமையாக சிந்தித்து, முதல் பானை செய்யும்போது செய்த தவற்றை திருத்தி மீண்டும் முயற்சி செய்தால், அவன் நினைத்ததைபோல், நல்ல வடிவமாகவும், அழகாகவும் வடிவமைக்க முடியும். எந்த ஒன்றையும் உருவாக்குவதற்கு, பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றோம், சில, பல நேரங்களை செலவழிக்கின்றோம். ஆனால் அதனை அழிப்பதற்கு நொடிப் பொழுதாகாது. இதனை கோபத்திற்கும், பொறுமைக்கும் உதாரணமாக கூறலாம், 'வாழ்க்கையில் நல்ல பெயர் எடுப்பது மிகவும் கஷ்டம். அதற்கு பொறுமை மிக, மிக அவசியம். கெட்டப் பெயரை நொடிப்பொழுதில் நிதானமற்ற நிலையில் எடுத்து சென்று விடலாம்'. வாழ்க்கையில் பல்வேறுப்பட்ட சூழ்நிலையில் தோல்விகளையும், இடையூறுகளையும் சந்திக்க நேரிடும்போது பொறுமையை கடைப்பிடிக்காவிட்டால், எதையும் வாழ்க்கையில் சாதிக்க முடியாது.

### ஒற்றுமைக்கு பொறுமை:

இறைவன் நமக்கு அழகான வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறான், அத்தகைய வாழ்க்கையை ஏன் கோபப்பட்டு, எரிச்சல்பட்டு வாழவேண்டும், வாழ்க்கையில் வரும் எந்த ஒரு பிரச்சனையையும் அமைதியான முறையில் சிந்தித்து அணுகவேண்டியிருக்கிறது. அப்படி செய்தால் மட்டுமே நாம் எதிர்பார்ப்பது போல் வாழ்க்கை சிறப்பாக அமையும். அதைவிட்டுவிட்டு ஏனோ, தானோவென்று தெளிவற்ற முறையில் நிதானமற்று, எதனையும் சிந்திக்காமல், சகிப்புத்தன்மையற்று வாழ்ந்தோமென்றால், கீழே போட்ட மண்பாண்டம் போல், நொடிப்பொழுதில் சிதறிவிடும் என்பதை மனதில் நிலை நிறுத்தி கொள்ள வேண்டும். வாழ்க்கையை கட்டுப்பாட்டோடு வாழ்வதற்கும், நாம் எண்ணிய இடத்தை அடைவதற்கும் பொறுமை அவசியமாகிறது.

'கட்டியதை உடைப்பது கோபம்! உடைத்ததை கட்டுவது பொறுமை'!

நன்றாக போய்க்கொண்டிருக்கும் வாழ்க்கையில் சில நேரங்களில் இடையூறுகள் வரலாம். அமைதிப் பூங்காவாக, ஒற்றுமையாக, கூட்டுக்குடும்பமாக இருந்த குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் வந்து பிளவு ஏற்படலாம். அத்தகைய சூழ்நிலையில் யார் மீது தவறு இருக்கிறது என்பதை நம் மனதில் இருக்கும் பொறுமை என்னும் ஆராய்ச்சி கூடத்தில் சென்று ஆராய்ந்தால் நமக்கு உண்மை புரிந்துவிடும். அதுவே குடும்பத்தில் மீண்டும் நல்ல சூழ்நிலை உருவாக வழிவகை செய்யும். அதை விட்டு, விட்டு கோபம் என்னும் சுத்தியலை வைத்து சுழற்றினோம் என்றால், மேலும் குடும்பம் சிதறி சின்னா, பின்னாமாகுமே தவிர ஒற்றுமை என்னும் வார்த்தையைக் கூட நினைத்து பார்க்க முடியாது.

உலகத்தில் ஏதாவது ஒரு மூலையில் அல்லாஹ்வின் கோபத்தால் பூகம்பமோ, மற்ற இடர்பாடுகளோ, ஏற்பட்டால், அந்த இடம் இருந்ததற்கான அறிகுறிகளே தெரியாமல் போய்விடும். இத்தகைய இடர்பாடுகள் யாரும்

எதிர்ப்பார்த்தா வருகிறது. யாரும் எதிர்பாரா வண்ணம் வந்து நம்மை கஷ்டத்தில் ஆழ்த்தி விடுகிறது. இந்த சூழ்நிலையில் நிவாரணத்திற்கான அனைத்து வழிகளையும் கையாண்டால் மட்டுமே அந்த இடம் புத்துயிர் பெற வாய்ப்பு இருக்கிறது. அதேப்போல தான் வாழ்க்கையிலும், நாம் எதிர்பாராவண்ணம் சிறு, சிறு குழப்பங்கள், சண்டைகள், துன்பங்கள் எது வந்தாலும் அதனை பொறுமை என்னும் கயிற்றைப் பிடித்துக் கொண்டால் மட்டுமே நீந்தி கரை சேர முடியும்.

### திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான்:

'இந்தப் பூமியிலோ உங்களிடமோ எந்தத் துன்பம் நிகழ்ந்தாலும் அதை நாம் உருவாக்குவதற்கு முன்பே பதிவேட்டில் இல்லாமல் இருக்காது. இது அல்லாஹ்வுக்கு எளிதானது'. (அல்குர்ஆன் 57: 22) இதனை மனதில் வைத்து எந்த விதமான கஷ்டமான, துன்பமான நிலையிலும் பொறுமைக் காத்து மேலும் அதனை சகித்துக்கொண்டு வாழ்வது அவசியமான ஒன்றாகும்.

### வெற்றியில் பொறுமை:

வெற்றிகனியை மட்டும் சுவைத்துக்கொண்டு வெற்றி நடைப்போடும் வெற்றியாளர்கள் யாருமில்லை என்றே கூறலாம். மனிதன் வாழ்க்கையில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தோல்வியை சந்திக்க வேண்டியிருக்கிறது. இதனால்தான் தோல்வியை வெற்றியின் முதல்படி என்று கூறி நமக்கு நாமே ஆறுதல் அடைந்து கொள்கிறோம். இங்கு ஒரு விஷயத்தை கூர்ந்து கவனித்தால் நமக்கு ஒரு உண்மை புலப்படும். ஒரு மனிதன் தோல்வி அடைந்துவிட்டால் என்ன செய்வான். நம்மால் வெற்றிப் பெற முடியவில்லை, அதனால் இந்த முயற்சியில் ஈடுபட வேண்டாமென்று ஒதுங்கி கொள்வானா? அப்படி ஒதுங்கிவிட்டால் வாழ்க்கையில் ஒரு போதும் வெற்றியின் உயரத்தை தொட முடியாது.

அவனது வாழ்க்கை இருண்ட பாலைவனம் போல் ஆகிவிடும். ஒருவன் தோல்வி அடைந்து விட்டால், அதற்கான காரணங்களை ஆராய வேண்டும். அதை நிவர்த்தி செய்தால் தான் நாம் வெற்றி கனியை சுவைக்க முடியும். எந்தவிதமான மனநிலையில் நாம் அதற்கான காரணங்களை ஆராய முடியும். அவசரப்பட்டால் அது அரை, குறையாகிவிடும்.! பதற்றப்பட்டால் சிதறி சின்னா, பின்னாமாகிவிடும்.! கோபப்பட்டால், கோடி கொடுத்தாலும் கிடைக்காது.

இந்த மாதிரியான தருணத்தில் தான் பொறுமை அவசியமாக இருக்கிறது. பொறுமையாக அலசி ஆராய்ந்து பாருங்கள் வெற்றியின் கதவுகளை திறப்பதற்கான வழி நமக்கு அழகாக கிடைக்கும். தோல்வி வாழ்க்கையின் உந்து சக்தியாக இருக்கிறது. ஊனமுற்ற ஒருவன் ஒரு கால் இல்லாமல் நடப்பதற்கு ஊன்றுகோல் எவ்வளவு உதவியாக இருக்கிறதோ! அது போல வாழ்க்கையில் எதாவது தருணத்தில் சந்திக்கும் தோல்வியைக்கண்டு துவண்டுவிடாமல், அதனை பொறுமை என்னும் ஊன்றுகோலோடு எதிர் கொண்டால் வெற்றி நிச்சயம்.!

### பொதுவாழ்க்கையில் பொறுமை:

இந்த உலகில் எத்தனைப்பேர் ஒளிவு, மறைவற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.?! இன்றைய உலக சூழ்நிலையில் அடுத்தவர்களைப்பற்றி பேசாதவர்களே இருக்க முடியாது என்று ஆணித்தரமாக கூறலாம். அப்படி சொல்வதற்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு, அலுவலகத்தில் பணிபுரிபவர்கள், தங்களது உயர் அதிகாரிகளைப் பற்றியோ, தனக்கு பிடிக்காதவர்களைப் பற்றியோ ஏதாவது குறை கூறிக் கொண்டே இருப்பார்கள், வேலையில் இருப்பவர்கள் இப்படியென்றால், வேலையில்லாதவர்களை பற்றி சொல்லவா வேண்டும். தேவையில்லாதவற்றை பேசி வீண் வம்புகளில் மாட்டிக் கொள்வார்கள். இன்னும் சொல்லப் போனால் வீட்டில் உள்ள பெண்கள், அவர்களைப் பற்றி சொல்ல வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அடுத்த வீட்டாரை பற்றிய குறைகள், அவதூறுகள் இப்படி பலவற்றை கூறலாம். இவையெல்லாம் எதற்கும் பிரயோஜனம் இல்லாத பேச்சுகள்.

சரி விஷயத்திற்கு வருவோம், பொறுமைக்கும் புறம் பேசுவற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று நினைக்க தோன்றும். ஆம், இரண்டிற்கும் முக்கிய காரணங்கள் உள்ளது. அடுத்தவர்களைப் பற்றி அவர்கள் இல்லாத நேரங்களில், அவர்களைப்பற்றிய அவதூறுகளையும், குறைகளையும் பேசுவதை புறம் என்று கருதப்படுகிறது. இது வாழ்க்கையில் மிகப்பெரிய தவறாகும். எத்தகைய சூழ்நிலையில் ஒருவன், அடுத்தவர்களைப் பற்றிய குறைகளை சொல்ல ஆரம்பிப்பான். அமைதியாக, மகிழ்ச்சியோடு, சந்தோசமாக இருக்கும் தருணத்திலா? அல்லது பொறுமையிழந்து நிதானமற்ற நிலையிலா?. அடுத்தவர்கள் மீது நமக்கு கோபம் ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம், அவர் இல்லாத சமயத்தில் நாம் அவரைப் பற்றி புகழ்ந்துப் பேசுவோமா? அல்லது அவதூறு பேசுவோமா? நாம் பொறுமை இழந்துவிட்டால், அடுத்தவர்களைப் பற்றி இல்லாததும், பொல்லாததும் பேசி, சில நேரங்களில் மாட்டிக் கொள்வதும் உண்டு. ஆக கோபம் ஏற்படும்போது நம்மையும் மீறி அகம்பாவமாக நடந்து கொள்கிறோம். இதெற்கெல்லாம் நமது மனநிலைதான் காரணம். மனிதன் பொறுமையை இழக்கும் தருணத்தில் மனது சுயரூபத்தைக் காட்டிவிடுகின்றது. நல்ல மனிதர்கள் என்று யாரை அடையாளம் காணுவோம், வெளிப்படையான வாழ்க்கை வாழ்பவர்களையா? அல்லது அடுத்தவர்களைப் பற்றி எப்போதும் குறை கூறிக் கொண்டு, புறம் பேசிக் கொண்டிருப்பவர்களையா?

கோபக்காரர்களும், அவசரக்காரர்களும் வாழ்க்கையில் வெற்றி பெற்றதாக சரித்திரம் இல்லை என்றே நினைக்கிறேன். இந்த உலகில் ஆத்திரப்படாமல், அவசரப்படாமல், கோபப்படாமல் பொறுமையாக இருந்து சாதித்தவர்கள் எத்தனைப் பேர் இருக்கிறார்கள். மேலும் சொல்ல வேண்டுமானால் ஆராய்ச்சியாளர்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தொழில் நுட்பத்தை கண்டுப்பிடிப்பதற்கு எத்தனை முறை முயன்றிருப்பார்கள், முயற்சி செய்த அத்தனை முறையும் வெற்றிப் பெற்றார்களா? ஒவ்வொரு முயற்சியிலும் கிடைத்த வெற்றியைவிட தோல்வியை அதிகமாக இருந்திருக்கும். அதையும் தாண்டி இன்று நாம் தொழில் நுட்பத்திலும் அறிவியல் வளர்ச்சியிலும் உயர்ந்து நிற்கிறோம் என்றால், அவர்களின் முயற்சியில் எவ்வளவு தடைகளும், தோல்விகளும் வந்த போதிலும், அதை பொறுமை என்னும் ஆயுதத்தைக் கொண்டு எதிர்க்கொண்டதால் தானே சாதிக்க முடிந்தது.

பிற்கால சந்ததியினரின் வாழ்க்கையை கருத்தில் கொண்டே அவர்கள் இந்த முயற்சியில் ஈடுப்பட்டிருப்பார்கள் என்று எண்ணத்தோன்றுகிறது. சரி, தனது குடும்பத்தை பற்றியே கவலைப்படாத இந்த காலக்கட்டத்தில், அந்த காலத்தில் இருந்த ஆராய்ச்சியாளர்கள், அடுத்தவர்களின் நலனைப் பற்றி கவலைப்பட்டதேன், என்று எண்ணத்தோன்றும். இங்கு

முக்கியமாக ஒன்றை கவனித்தால், ஒரு உண்மை விளங்கும். ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞானிகளும் சுய நலத்தோடு இருந்திருந்தால், இன்று உலகில் உள்ள மூலை, முடுக்குகளிலெல்லாம் உபயோகப்பட்டுக் கொண்டிருக்கும் விமானம், தொலைப்பேசி, கணினி, மின்சாரம் மற்றும் பல்வேறு வகையான தொழில்நுட்பங்களை உபயோகிக்க வழிக் கிடைத்திருக்குமா? அல்லது சாதித்திருக்கதான் முடியுமா? என்பதை உணர வேண்டும்.

எனவே தான் பொது நலம் வாழ்க்கையில் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. சுயநலவாதி என்றைக்குமே அடுத்தவர்களைப் பற்றி நினைக்க முடியாது. எந்நெரமும் தன்னுடைய இன்பமயமான வாழ்க்கையைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பவனுக்கு, அடுத்தவர்களுடைய தேவைகளை எப்படி அறியமுடியும். மேலும் சுய நலவாதிகளைப் பாருங்கள், எதையும் காது கொடுத்து கேட்க மாட்டார்கள், தான் சொல்றதுதான் சரி என்று கருதுவார்கள், எதற்கெடுத்தாலும் அவசியமில்லாமல் கோபப்படுவார்கள், இது தான் சுயநலவாதிகளின் அடையாளம். ஒருவர் தன்னிகரற்ற பொது நலத்தோடு வாழவேண்டும் என்றால் அவருக்கு பொறுமை அவசியமான ஒன்றாக இருகின்றது. எதையும் பொறுமையோடு எதிர்க்கொண்டால் மட்டுமே வாழ்க்கையில் வெற்றிக் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், அடுத்தவர்களின் நலனையும் புரிந்து கொள்ள வழி கிடைக்கும்..

நமக்கு யாரேனும் அநீதி இழைத்துவிட்டாலோ அல்லது நமக்கு துன்பத்தை விளைவித்துவிட்டலோ , அதனை பழிவாங்குவதன் மூலம் தீர்த்து விட முடியாது. அப்படி செய்தோம் என்றால், வாழ்நாள் முழுவதும் வருத்தப் படவேண்டி வரும். பொறுமையாக யோசித்தால் மட்டுமே அடுத்தவர்களின் நியாயம் புரியும்.

### பொறுமையின் சிறப்புகள்:

பொறுமை வாழ்க்கையை எளிமையாக்குகிறது.

பொறுமையின் எதிரி கோபம்.

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு தோல்வி கிட்டும், பொறுமையாளர்க்கு வாழ்க்கையில் வெற்றிக்கிட்டும். பொறுமையாளர்கள் வீரர்கள், கோபக்காரர்கள் கோழைகள்.

ஏற்றத்தாழ்வுடன் வாழ்பவனே கோபமும், ஆத்திரமும் அடைகிறான்.

பொறுமையாக இரு அன்பாக பழகு.

பொறுமையில் தான் பொக்கிஷம் இருக்கிறது.

பொறுமையாக இருப்பவனுக்குதான் நம்பிக்கை இருக்கிறது.

பொறுமையும், விடாமுயற்சியும், மலைகளை வெல்லும் – காந்தி

பொறுமையாளர்களிடம் இறைவன் இருக்கிறான் - அல் குர்ஆன்.

### முடிவுரை:

உலகில் உள்ள பல்வேறுப்பட்ட இடங்களில் வறுமையாலும், கடன்சுமையாலும், இனம்புரியாத, வெளியில் சொல்லமுடியாத கவலைகளாலும் இன்று பலரும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஒருவர் நிரந்தர நோயால் அவதிப்படலாம். சிலர் வறுமையால் துன்புறலாம். இன்னும் சிலருக்கு அடுக்கடுக்கான துன்பங்கள் வரலாம். எது வந்தபோதும் அனைத்தையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு அல்லாஹ்வின் பெயரால் வாழ்பவன் மட்டுமே மனிதன். இதை விட்டுவிட்டு, கோபத்தால் உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் பகைத்துக் கொண்டு வாழ்வது தவறான ஒன்றாகும். எனவேதான் எது நடந்தாலும் அல்லாஹ்வின் நாட்டப்படிதான் நடக்கிறது. இதில் வருத்தப்படவோ, கோபப்படவோ தேவையில்லை என்று வாழ்க்கையை உணர்ந்தால் மட்டுமே, அல்லாஹ் மறுமையிலும், இம்மையிலும் தனது அருள்மழையை பொழிவான் என்பதை மனதில் வைத்து, இந்த அழகிய வாழ்க்கையை சிறந்த முறையில் வாழ எல்லாம் வல்ல அல்லாஹ் கிருபை செய்வானாக!!

### என்னைப்பற்றி

எனது பெயர் முஹம்மது பைரோஸ்கான் எனது சொந்த ஊர் திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர். நான் திருச்சியில் உள்ள ஜமால் முஹம்மது கல்லூரியில் பி.காம் படித்துள்ளேன். எனக்கு பத்திரிக்கை துறையில் ஆர்வம் இருந்தபடியால் அதற்கான முயற்சியில் அப்போதிலிருந்தே ஈடுப்பட்டிருந்தேன். சென்னையில் உள்ள ஒரு மாத இதழில் ACCOUNTANT ஆக பணிபுரிந்ததன் மூலம் அதற்கான சில வழிமுறைகளைக் கற்றுக்கொண்டேன். தற்போது துபையில் உள்ள EXPORT COMPANYயில் கடந்த இரண்டு வருடங்களாகப் ACCOUNTANT ஆக பணிபுரிந்து வருகிறேன் இவ்வாண்டு விகடன்.காம்ல் 'தேர்தல்களம் 2009 ல்' வெளிவந்த நானும் பத்திரிக்கையாளன் என்ற பகுதியில் நான் எழுதிய 'வாக்களிப்பதின் அவசியமும்' 'விஜயகாந்த் முடிவால் இலாபம் யாருக்கு' என்ற கட்டுரைகளும் எனக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. அதன் தொடர்ச்சியாகதான் தங்களின் சுவனப்பாதை நடத்தும் கட்டுரைப்போட்டிகாக பொறுமையின் அவசியத்தை உணர்த்தும் இந்தக் கட்டுரை.

---

### *பாவங்களும் தண்டனை... முதல் பக்க தொடர்ச்சி...*

நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

நான் ஒன்றை உங்களுக்கு ஏவினால் அதில் முடியுமானவைகளை செய்யுங்கள் நான் ஒன்றை தடுத்துவிட்டால் அதை முற்றாக தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

ஏவல் விஷயத்தில் முடியுமானவைகளை செய்வதும் தடுக்கப்பட்ட விஷயத்தை முற்றாக தவிர்ந்து கொள்வதே ஒரு முஸ்லிமின் கடமையாகும். பாவங்கள் மொத்தத்தில் அல்லாஹ்விற்கு மாறுசெய்யக்கூடியவைகளாக இருந்தாலும் அதன் படித்தரங்களில் ஏற்றத்தாழ்வு இருக்கின்றது. சில பாவங்களுக்கு தண்டனைகள் அதிகமானதாகவும் சில பாவங்களுக்கு தண்டனைகள் குறைந்ததாகவும் இருக்கின்றது. இதை அறிஞர்கள் பெரும் பாவங்கள் சிறு பாவங்கள் என பிரித்து தந்திருக்கின்றார்கள். பெரும்பாவங்களில் முதலிடத்தை பிடிக்கக்கூடியது ஷிர்க் இணைவைப்பாகும் இதனைத்தொடர்ந்து மற்றப்பாவங்கள் இடம்பெறும். பெரும்பாவங்கள் செய்தவர் அப்பாவங்களுக்காக அல்லாஹ்விடத்தில் அவசியம் பாவமன்னிப்பு தேடவேண்டும். யாராவது தான் செய்த பெரும் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்காமல் மரணித்துவிட்டால் அவரை அல்லாஹ் நாடினால் ஏதும் தண்டனையின்றி மன்னித்து சுவர்க்கத்திற்கு அனுப்பலாம். அல்லாஹ் நாடினால் தண்டித்து விட்டு சுவர்க்கத்திற்கு அனுப்பலாம் இது அவனுடைய விருப்பத்திற்குரிய ஒன்றாகும். ஆனால் யாராவது ஷிர்க் செய்துவிட்டு பாவமன்னிப்பு கேட்காமல் மரணித்துவிட்டால் அவரின்

பாவத்தை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்கமாட்டான் அவர் செல்லுமிடம் நரகத்தை தவிர வேறில்லை. அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான்;. இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்;. யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள். 4:48

மொத்தத்தில் பாவங்கள் அல்லாஹ்விற்கு மாறு செய்யக்கூடியதாக இருந்தாலும் அவைகளை அறிஞர்கள் பெரும்பாவம் சிறுபாவமென இரண்டு வகையாக பிரித்திருக்கின்றார்கள்.

பெரும்பாவமென்பதுஃ எந்தப்பாவத்திற்கு அல்லாஹ்வின் சாபம் அல்லது அல்லாஹ்வின் கோபம் அல்லது நரக வேதனை அல்லது ஹராம் என்று கூறப்பட்டிருக்கின்றதோ அவைகள் அனைத்தும் பெரும்பாவங்களே.

இதை பல அறிஞர்கள் பெரும்பாவங்கள் என்ற தலைப்பில் பல நூல்களை கோர்வை செய்திருக்கின்றார்கள். அதில் கூறப்பட்டவைகள் மாத்திரம்தான் பெரும்பாவங்களென்று எண்ணிவிடக்கூடாது. நாம் மேற்கூறிய வரைவிலக்கணத்திற்கு உட்பட்ட அனைத்தும் பெரும்பாவங்களே!

பெரும்பாவத்திற்காக தவ்பா செய்வது அவசியமாகும். நாம் செய்யும் நல் அமல்கள் அதற்கு பரிகாரமாகாது. அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

நீங்கள் தடுக்கப்பட்டுள்ளவற்றில் பெரும் பாவங்களை தவிர்த்து கொண்டால் உங்களுடைய குற்றங்களை நாம் மன்னிப்போம். உங்களை மதிப்புமிக்க இடங்களில் புகுத்துவோம். 4:31

நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

பெரும்பாவத்தை தவிர்ந்திருக்கும் வரை ஐநேரத் தொழுகைகளும் ஒரு ரமளான் அடுத்த ரமளானுக்கு மத்தியிலுள்ள பாவங்களுக்கு பரிகாரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

அழித்துவிடக்கூடிய ஏழு பெரும்பாவங்களை தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு நபித்தோழர்கள். அவைகள் எது அல்லாஹ்வின் தூதரே! என கேட்டார்கள். இணைவைத்தல், சூனியம் செய்தல், தக்க காரணமின்றி ஒரு உயிரை கொலை செய்தல், வட்டி உண்ணுதல், அனாதைகளின் பொருளை உண்ணுதல், யுத்த களத்தில் புறமுதுகு காட்டி ஓடுதல், அப்பாவித்தனமான பத்தினிப்பெண்ணை அவதூறு கூறுதல் எனக்கூறினார்கள். (புகாரி)

மேற்கூறப்பட்ட திருவசனத்திலும் நபிமொழியிலும் பெரும்பாவங்கள் என்று கூறப்பட்டிருப்பதே பாவங்களில் பெரும்பாவம் சிறுபாவம் என்று இருக்கின்றது என்பதற்கு ஆதாரமாகும். அவ்வாறே நல் அமல்கள் செய்வது பெரும்பாவங்களுக்கு பரிகாரமாக அமையாது என்பதையும் தெரிந்து கொண்டோம்.

பாவங்களின் இரண்டாவது வகை சிறு பாவங்களாகும். சிறு பாவங்கள் என்பது பெரும்பாவங்களுக்கு கூறப்பட்ட வரையறைக்கு உட்படாததாகும். சிறுபாவங்கள் தவ்பா இன்றி மன்னிக்கப்படும். நல் அமல்கள் செய்வது சிறுபாவங்களுக்கு பரிகாரமாகும். ஆனால் சிறுபாவம் செய்தவர் பெரும்பாவங்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும்.

பகலின் (காலை, மாலை ஆகிய) இருமுனைகளிலும், இரவின் பகுதியிலும் நீங்கள் தொழுகையை நிலைப்படுத்துவீராக - நிச்சயமாக நற்செயல்கள், தீயச்செயல்களைப் போக்கிவிடும் - (இறைவனை) நினைவு கூறுவோருக்கு இது நல்லுபதேசமாக இருக்கும். 11:114

எங்கிருந்த போதும் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். பாவத்திற்கு பின் அதை அழித்துவிடும் நன்மையை தொடரச் செய்யுங்கள் மனிதர்களுடன் நற்குணத்துடன் நடந்து கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

இப்படிக் கூறுவதால் சிறுபாவங்களை தாராளமாகச் செய்யலாம் என்று யாரும் எண்ணி விடக்கூடாது. அப்படி எண்ணுவதை நபி (ஸல்) அவர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

நீங்கள் பாவங்களை சாதரணமாக எண்ணுவதிலிருந்து உங்களை நான் எச்சரிக்கை செய்கின்றேன். பாவங்களை சாதாரணமாக எண்ணுவதற்கு உதாரணம் ஒரு (பிரயாண) கூட்டத்தார் அவர்கள் ஒரு ஓடையில் (களைப்பாறுவதற்காக) இறங்கி (சமைப்பதற்காக) அவர் ஒரு குச்சியும் இவர் ஒரு குச்சியுமாக ஒன்று சேர்த்து (அவர்கள் சேர்த்த குச்சிகள்) அவர்களின் உணவை சமைக்கும் அளவிற்கு (போதுமான) ஒன்று சேர்த்த கூட்டத்திற்கு ஒப்பாகும். பாவங்களை சாதாரணமாக எண்ணுபவர் அதற்காக குற்றம் பிடிக்கப்பட்டால் அது அவரை அழித்துவிடும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

அற்பமான சிறு குச்சிகள் ஒன்று சேரும்போது ஒரு கூட்டத்தாரின் உணவை சமைக்கும் அளவிற்கு போதுமாகுவது போல் சிறுபாவங்கள் ஒன்று சேரும்போது அந்த மனிதனை அது அழித்து விடும் என நபி(ஸல்) அவர்கள் நம்மை சிறுபாவத்தை தொடர்வதை விட்டும் இந்த ஹதீதின் மூலம் எச்சரித்திருக்கின்றார்கள்.

சிறு பாவங்களை துச்சமாக (அற்பமாக) கருதுவது பெரும்பாவ அளவிற்கே அதைச்செய்பவரை கொண்டு சென்று விடலாம். சிறு பாவங்களை துற்சமாக கருதுவதென்பதற்குரிய அடையாளங்களில் சிலது பின்வருமாறு.

### 1. சிறு பாவங்களை தொடர்ந்து செய்வது

தவிர, மானக்கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும். உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்;. அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள். 3:135

தெரிந்து கொண்டே பாவத்தை தொடர்பவர்களுக்கு கேடுதான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

முன் சென்ற அறிஞர்களின் கூற்றுக்களில் ஒன்றுஃ

(பாவ மன்னிப்புச் செய்வது பெரும் பாவத்தை அழித்துவிடும், தொடர்ந்து சிறு பாவம் செய்வது சிறுபாவமாகாது)

### 2. அதை பகிரங்கப்படுத்துவது

தான் செய்யும் பாவங்களை பிறரிடம் கூறித்திரிவது

ஒரு முஸ்லிமின் பண்பாக இருக்கமுடியாது. ஒரு முஸ்லிமிடம் ஏதாவது தவறு நிகழ்ந்து விட்டால் அதற்காக வருந்த வேண்டும், அல்லாஹ்விடத்தில் உடனடியாக பாவமன்னிப்பு கோர வேண்டும்.

பாவத்தை பிரபல்யப்படுத்தக்கூடியவரைத் தவிர (மற்ற) என்னுடைய உம்மத்தின் அனைவரின் பாவங்களும் மன்னிக்கப்படும். பாவத்தை பிரபல்யப்படுத்துவதென்பது, இரவில் ஒருவன் ஒரு தவறைச் செய்து அதை அல்லாஹ் மறைத்திருந்தும் காலையில் எழுந்து (ஒருவரைப் பார்த்து) மனிதனே நான் இவ்வாறு இவ்வாறு (தவறுகளை) நேற்றிரவு செய்தேன் எனக்கூறுவான். இரவு நடந்த தவறை அவனுடைய இறைவன் மறைத்திருந்தும் இவன் காலையில் எழுந்து அல்லாஹ் மறைத்ததை அம்பலப்படுத்துகின்றான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

### 3. அற்பமாக கருதுவது

பாவங்கள் அதனுடைய தண்டனைகள் கூடக்குறைவாக இருந்தாலும் பெரும்பாவங்கள் சிறு பாவங்கள் என்று பிரிக்கப்பட்டிருந்தாலும் அது சிறு பாவம் என்று அற்பமாக கருதிவிடக்கூடாது. பாவம் சிறியதாக இருந்தாலும் அது நம்மை படைத்த றப்புக்கு மாறு செய்யும் செயலாக கருத வேண்டும். முன்சென்ற அறிஞர்களின் கூற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். "பாவம் சிறியது என்று பார்க்க வேண்டாம், யாருக்கு மாறு செய்கின்றீர்களோ அவனின் வலுப்பத்தை பாருங்கள்" ஒரு பாவத்தை அற்பமாக கருதுவது அவனை நரகத்துக்கே அழைத்துச்செல்லும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், ஒரு அடியான் அல்லாஹ்வின் கோபத்திற்குரிய வார்த்தையை எந்தவித கணக்குமின்றி பேசுகின்றான் அதனால் அவன் நரகம் செல்வான் என கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

பாவத்தை அற்பமாக கருதுவதும் அதில் பொடுபோக்குச் செய்வதும் ஒரு நல்லடியாரின் பண்பாக இருக்கமுடியாது.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி) அறிவிக்கின்றார்கள், பாவம் செய்த ஒரு நல்லடியான் அவன் செய்த பாவங்களை நினைத்து இவ்வாறு கருதுவான், அவன் ஒரு மலையடியில் இருப்பதாகவும் அது அவன் மீது விழுந்து விடுமோ என்பது போல் அஞ்சுவான், பாவம் செய்த கெட்ட அடியான் அவன் செய்த பாவங்களை நினைத்து இவ்வாறு கருதுவான், அவனின் மூக்கில் ஒரு ஈ இருந்து பறந்து போனது போல் எண்ணுவான்."

ஆகவே! பாவம் சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் அதை ஒரு முஸ்லிம் செய்யக்கூடாது. செய்த பாவங்களுக்காக மரணத்திற்கு முன் அல்லாஹ்விடத்தில் உண்மையான பிழை பொறுப்பு தேடிக் கொள்ள வேண்டும். நாம் மரணிப்பதற்கு முன் உண்மையான தவ்பா செய்த நன்மக்களாக நம் அனைவரையும் அல்லாஹ் ஆக்கியருள்வானாக!

# இயற்கை மார்க்கம் இஸ்லாமே!

இன்று உலகம் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினை சூழல் மாசடைவதாகும். மனிதனுக்கும் மற்றும் ஜீவராசிகளுக்கும் வாழ்வதற்குப் பொருத்தம் இல்லாததாக, முழு உலகமும் அழிவுப்பாதையை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறது.

இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு, விஞ்ஞானிகள் எல்லாம் முயற்சி செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆனால், 'சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கு ஒரே வழி, இஸ்லாம் கூறும் ஆன்மீகக் கோட்பாடுகளைக் கடைப் பிடிப்பதுதான்!' என்று பிரித்தானிய இளவரசர் சார்லஸ் அவர்கள், ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலே, அண்மையில் நடந்த ஒரு பேருரையின்போது கூறி இருக்கிறார்.

'மனிதன், தான் வாழும் உலகை மாசடையச்செய்து அழிப்பது என்பது, எந்தச் மதத்திற்கும், குறிப்பாக இஸ்லாத்திற்கு, முற்றிலும் முரணான செயலாகும். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே காணப்படும் இந்த நாசகாரச்செயல், சிலர் நினைப்பதுபோல், உலகம் தொழில் மயமாக்கப்படுவதால் மட்டும் ஏற்பட்டுவிடவில்லை. மாறாக, நபி(ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையின் தத்துவத்திற்கு எதிரான ஒரு மனப்போக்குடன் நாம் வாழ்வதுதான் இந்த அழிவுக்கு முக்கிய காரணமாகும்' என்றும் இளவரசர் கூறினார்.

இவர், ஒரு நடைமுறைக் கிறிஸ்தவர்! பிரித்தானியாவின் மன்னராக எதிர்காலத்தில் முடிசூட்டிக்கொள்ள இருப்பவர்! அப்போது, பிரித்தானிய 'கிறிஸ்தவத் திருச்சபை'யின் தலைவராகப் பணியாற்ற இருப்பவர்! இருந்தும், ஆக்ஸ்போர்ட்டின் புத்தி ஜீவிகள் நிறைந்திருந்த அந்த மகாசபையில், தாம் குர்ஆனை மிகவும் ஆராய்ந்து படித்ததாகவும், அதிலே, மனிதனுக்கும் அவனைச் சுற்றியுள்ள இயற்கைக்கும் இடையில் உள்ள இறுகிய பிணைப்பைப்பற்றிய உபதேசம் காணப்படுவதாகவும் கூறினார். 'நாம், இயற்கையின் வரையறைக்குட்பட்டதாகவே நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வது அவசியம்' என்றும் கூறினார்.

'நமக்கு இடைஞ்சலாக இருக்கும் ஒரு உண்மை எது தெரியுமா? மனிதன் இந்த உலகை ஏனைய உயிரினங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது! அந்த உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் இடையே மிகவும் சிக்கலான ஒரு பிணைப்புவலை இருக்கிறது. அதில் அவசியம் இருக்கவேண்டிய 'சமநிலை' தவறாமல் வைத்திருக்க வேண்டும்! தவறினால், அவை அழியும்போது, மனிதனின் அழிவும் நிச்சயமாகிவிடும்! இதுதான் அந்தக் கசப்பான உண்மை' என்றும் இளவரசர் கூறினர்.

தனது ஒருமணி நேர, நீண்ட பேருரையின் முடிவில், 'இயற்கையோடு ஒத்து வாழ்வதன் அவசியத்தை இஸ்லாம் எப்போதும் வலியுறுத்துகிறது என்றும், தவறுவது, இறைவனது படைப்பின் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானது' என்றும் இளவரசர் சார்லஸ் கூறினார்.

எல்லாம் வல்ல அல்லாஹ், இவர்களுக்கெல்லாம் ஹிதாயத்தைக் கொடுக்கவேண்டும்!

அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்

இன்னும் கூறுவீராக 'எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே! அவன் சீக்கிரத்தில் உங்களுக்குத் தன் அத்தாட்சிகளைக் காண்பிப்பான் அப்போது அவற்றை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்' மேலும் உம்முடைய இறைவன் நீங்கள் செய்வதை விட்டும் பராமுகமாக இல்லை. (அல்-குர்ஆன் 27: 93)

*அபூ ரிஃப்அத்*

# சங்கதிகளும் இங்கிதங்களும் (பாகம்-4)

- உம்மு ரிஃப்அத்

இது ஓர் ஏழு வயதுச் சிறுவனின் ரமளான் சிந்தனை. இவனது அப்பாவித்தனமான, ஆனால், அவசியமான வினாக்களைக் கவனியுங்கள்.

ஆழ்ந்த சிந்தனையில் இருந்த சிறுவன், தனது தாயைப்பார்த்துக் கேட்டான், 'அம்மா! நாம் ஏன் நோன்பு நோற்க வேண்டும்?'

'இது ஒரு நல்ல கேள்வி' என்றாள், தாய். அது அல்லாஹ்வினதும், அவனது ரசூல்(ஸல்) அவர்களினதும் கட்டளையும் வழிகாட்டலுமாகும் என்பதுதான் உண்மை. இருப்பினும், ஒரு சிறுவனுக்கு விளங்குவது போல் ஒரு பதிலைத் தயார் செய்கிறாள். உடனே எழுந்து சென்று, சமையல் அறைக்குப் போய், ஏதோ ஒரு பொருளைக் கொண்டு வந்தாள்.

'இது என்ன?'

'இது ஒரு ப்லெண்டர் (மிக்சி)'

'இதன் உபயோகம் என்ன என்று தெரியுமா?'

'இது பழங்களை அடித்து, பழரசம் தயாரிக்கும்'.

'சரியாகச் சொன்னாய்'. அன்னை சிரித்தாள். 'ஆம், பழரசம் தயாரிக்கும்! நமது உடல் இயங்குவதும் இது போலத்தான். நாம் உண்ணும் உணவை அரைக்கிறது. அத்துடன், உணவிலுள்ள ஊட்டச் சத்துக்களை உறுஞ்சிக்கொண்டு, கழிவை வெளிவிடுவதையும் செய்கிறது. நாம் பிறந்ததிலிருந்து, இறக்கும் வரை இப்படித் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறது!'

'அப்படியென்றால், நமது உடல் களைப்படைவதில்லையா, அம்மா?'

'நிச்சயமாகக் களைப்படையும், ப்லெண்டரைப்போல! தொடர்ந்து நீண்ட நேரம் பழவகைகளை அரைத்துக் கொண்டிருந்தால், ப்லெண்டரும் பழுதடைந்துவிடத்தான் செய்யும்! அதேபோல, நமது உடலுக்கும், அது செய்யும் இந்த வேலையிலிருந்து இடைக்கிடையே ஓய்வு தேவைப்படுகிறது. அதனால்தான் ரமளான் மாதத்திலேயும் மற்றும் சில நாட்களிலும் நோன்பு நோற்கின்றோம்.

'எல்லோரும் நோன்பு நோற்பார்களா, அம்மா?'

'எல்லோராலும் நோன்பு நோற்க முடியாது. ஒருவர் நோய்வாய்ப்பட்டு அல்லது ஒரு பெண் கர்ப்பமுற்று இருந்தால், அல்லது பாலூட்டுபவளாக இருந்தால், அல்லது உனது பாட்டனாரைப்போல வயது முதிர்ந்து, பலவீனராக இருந்தால், அல்லது ஏழு வயதுக்குக் குறைவான சிறு குழந்தைகளாய் இருந்தால், அவர்கள் நோன்பு நோற்க வேண்டியதில்லை'.

சிறுவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். அவன் தொடர்ந்து சிந்திப்பது தெரிந்தது.

'நோன்பு நோற்க விருப்பமில்லை என்றால், விட்டுவிடலாமா, அம்மா?' என்று கேட்டான்.

இந்த வினாவுக்கும், அவனது வயதுக்குத்தக்க பதிலொன்றைத் தயார் செய்தாள், அம்மா.

'உனது அக்காவிற்கு மிகவும் பிடித்த நிறம் எது?'

'இளஞ்சிவப்பு'.

'அவளது பாடசாலைச் சீருடை?'

'நீலம்'.

'அவளுக்குப்பிடித்த இளஞ்சிவப்பு ஆடைகளை அணிந்து, பாடசாலை செல்வதில்லையே,. அது ஏன்?'

'அவளுக்குத் தண்டனை கிடைக்கும்'.

'பார்த்தாயா? அவளுக்குத் தண்டனை தருவது, பாடசாலையின் சட்டதிட்டங்களை மீறியதற்காகத்தான். அவர்கள் விதித்தபடி, நீலநிறச் சீருடையைத்தவிர, வேறெதுவும் அணிவது குற்றமாகும்'.

'மகனே, அல்லாஹ் எல்லாவற்றையும் பார்க்கிறான். அவன் அறியாதவை எதுவுமில்லை. நமக்கு எது நல்லது எது கெட்டது என்பது அவனுக்குத் தெரியும். எனவே, அவன் கட்டளைப்படி நாம் வாழவேண்டும். நாங்கள் அவனை நம்புகிறோம் அவனிற்கு மட்டும்தான் பயப்படுகிறோம். அவன் வெறுப்புக்கும் கோபத்திற்கும் ஆளாகாமல் இருப்பதுதான் தலையாய கடமையாகக் கருதுகிறோம். எனவேதான், அவனது கட்டளையின்படி, ரமளான் மாதத்திலே நோன்பு நோற்பதை எல்லா முஸ்லிம்களும் தவறாமல் செய்து வருகிறோம்.

'அது சரி, நோன்பிருக்கும்போது உங்களுக்குப் பசி எடுக்காதா, அம்மா?

'நிச்சயமாகப் பசிக்கும். நாங்கள் அல்லாஹுவின் திருப்திக்காக, தாங்கிக் கொள்வோம். மேலும், வேறுபல நற்கருமங்களில் எங்களை ஈடுபடுத்திக் கொள்வோம். குர்ஆன் ஓதுவோம். நோய்வாய்ப்பட்டவர்களைப் பார்த்து உதவிகள் செய்வோம் ஆறுதல் சொல்லுவோம். மஸ்ஜிதுக்குப் போவோம். அங்கு நடக்கும் 'பயான்' சொற்பொழிவுகளில் கலந்துக் கொள்வோம். இப்படி இருக்கும்போது நம்மை அறியாமலேயே நேரம் செலவாகி, இஃப்தாருக்கான நேரம் வந்துவிடும். அப்போது சாப்பிடுவோம்' என்று கூறிச் சிரித்தாள் அன்னை.

ஆனால், சிறுவன் விடுவதாய் இல்லை! 'முஸ்லிம்கள் நோன்பு நோற்பதற்கு, வேறு காரணங்களும் இருக்குமா, அம்மா?'

'ஆம் மகனே. நாம் எல்லாம் வசதியுள்ளவர்கள். நம்மால் வேண்டிய உணவு வகைகளை உண்ண முடியும். ஆனால், உண்ண உணவில்லாமல் எத்தனையோபேர் தவிக்கிறார்கள் தெரியுமா? அவர்கள் எவ்வளவு வேதனையுடன் வாழ்கிறார்கள் என்று நாமும் உணர வேண்டாமா? அதற்காகவும்தான் நோன்பு இருக்கிறோம், பசியின் கொடுமையை உணர்கிறோம். அப்போது, அந்த ஏழைகளுக்கு உதவவேண்டும் என்ற உணர்வு அதிகரிக்கிறது, அவர்களுக்கு ஓடிச்சென்று உதவுகிறோம்.

சிறுவனுக்கு தாயின் பதில் திருப்தியாக இருந்தது. 'அம்மா, நானும் உங்களைப்போல் நோன்பு நோற்கப் போகிறேன்' என்றான்.

தொடர்ந்து, 'நீங்களும் வாப்பாவும் ஒன்றாகப்போய் அந்த ஏழைகளுக்கு உதவிகள் செய்வீர்கள் அல்லவா? அப்போது என்னையும் கூட்டிக்கொண்டு போவீர்களா?' என்றும் கேட்டான்'.

அந்தச் சிறுவனின் கேள்விகளையும், தாயின் சமயோசிதமான பதில்களையும், அதனால் அந்தப்பிஞ்சு உள்ளம் அடைந்த வழிகாட்டலையும் கவனித்தீர்களா?

இனி, நபி(ஸல்) அவர்களின், ரமளான் அறிவுரைகள் சிலவற்றை நோக்குவோம்.

1) யார் கெட்ட பேச்சுக்களையும், செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவர் உணவை விடுவதிலும், குடிப்பை விடுவதிலும் அல்லாஹ்விற்கு எந்தத் தேவையும் இல்லை என நபி(ஸல்) அவர்கள்

கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)

2) எத்தனையோ நோன்பாளிகள், அவர்கள் பசித்திருந்ததைத் தவிர வேறு எதையும் அவர்களின் நோன்பினால் பெற்றுக்கொள்வதில்லை, இன்னும் இரவில் நின்று வணங்கும் எத்தனையோ பேர், இரவில் கண்விழித்திருப்பதைத் தவிர வேறு எதையும் பெற்றிருப்பதில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: நஸாயி, இப்னுமாஜா)

3) உங்களில் ஒருவர் நோன்பு நோற்றிருந்தால் தன் மனைவியோடு உடலுறவு கொள்ளக்கூடாது. இன்னும் கெட்டவார்த்தைகள் பேசவும் கூடாது. யாராவது அவரை ஏசினால் அல்லது அடித்தால் அவர் " நோன்பாளி " என்று கூறிக்கொள்ளட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

எனவே, எந்தப்பாவங்களும், தீய எண்ணங்களும் இல்லாத தூய உள்ளத்துடன் நல்ல அமல்களைச் செய்யுங்கள். உங்கள் 'றப்'பிடம் மனமுருகி உதவி தேடுங்கள். தொடர்ந்து நோன்பு நோற்கவும் திருக்குர்ஆனை ஒதுவதற்கும் சக்தியைத் தரும்படி கேளுங்கள். இந்த மேலான மாதத்திலே, எல்லாம் வல்ல அல்லாஹுவிடம் பாவமன்னிப்பைக் கேட்டுப் பெறாதவன் பெரும் நஷ்டவாளியாக இருக்கிறான். நோன்பு நோற்கும்போது, நியாயத்தீர்ப்பு நாளின் பசியையும் தாகத்தையும் நினைவு கூருங்கள். ஏழை எளியவர்களுக்குத் தாராளமாக உதவுங்கள். பெரியோர்களை மதியுங்கள். சிறுவர்கள்மீது அன்பு காட்டுங்கள். உற்றார் உறவினர்களை அரவணைத்து வாழுங்கள். உங்கள் நாவுகளை இழிசொற்களில் இருந்தும், கண்களை அசூசையான காட்சிகளில் இருந்தும் உங்கள் செவிகளை தடுக்கப்பட்ட இசை, வசை போன்றவற்றிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

அனாதைகளுக்கு இரக்கம் காட்டுங்கள். அப்போதுதான் உங்கள் குழந்தைகளும், அவர்கள் அனாதைகளாக நேர்ந்தால், இரக்கம் காட்டப்படுவார்கள்.. அல்லாஹ்விடத்திலே, பாவமன்னிப்புக் கேளுங்கள். தொழுகின்ற நேரம் மிகப்பொருத்தமாக இருப்பதால், கைகளை உயர்த்தி து'ஆச் செய்யுங்கள். ஏனெனில், அப்போது, அல்லாஹ் தனது அடிமையின்மீது மிகவும் இரக்கப்படுகிறான். அல்லாஹ் கேட்பதைத் தருகிறான். கேள்விகளுக்குச் செவி சாய்க்கிறான். விரும்பியதை வாரி வழங்குகிறான். புகழ்ந்தால் ஏற்றுக்கொள்கிறான்.

ஓ மனிதர்களே, உங்கள் உள்ளங்களை ஆசைகளுக்கு அடிமைப்படுத்தி விட்டீர்களா? அல்லாஹ்விடத்திலே பிரார்த்திப்பதன் மூலம் உள்ளங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். நீங்கள் சுமந்துகொண்டிருக்கும் பாவ மூட்டைகளினால் உங்களின் முள்ளந்தண்டுகள் முறிந்து போய்விடக்கூடும்! அதனால், சுஜூது செய்திருக்கும் நேரத்தை அதிகரியுங்கள்; உங்கள் பாவங்கள் குறைந்து இலேசாகிவிடும். தொழுகையாளிகளையும் சுஜூதில் இருப்பவர்களையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பதாக, எல்லாம் வல்ல அல்லாஹ், தனது கௌரவத்தின்மீதும் மாட்சிமையின்மீதும் சத்தியம் செய்திருக்கிறான்.

அனாதைகளை மதித்து, இரக்கத்துடன் ஆதரியுங்கள். மறுமையிலே, அல்லாஹ் உங்கள்மீது இரக்கம் காட்டுவான். இன சனத்தவர்களை அரவணையுங்கள். மறுமையிலே அல்லாஹ் தனது கருணையை உங்கள்மீது பொழிவான். ஆனால், தன்னைச் சேர்ந்தவர்களை துன்பப்படுத்துபவனை தனது கருணை சற்றும் கிடைக்காதவாறு தூரப்படுத்தி விடுகிறான்.

ஓ மனிதர்களே, இம்மாதத்திலே, சுவனத்தின் கதவுகள் திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றன. அவை உங்களுக்கும் அப்படியே திறந்து இருக்கவேண்டும் என்று அல்லாஹுவிடத்திலே பிரார்த்தியுங்கள். மேலும், இம்மாதத்திலே, நரகத்தின் கதவுகள் மூடியிருக்கின்றன. அவை உங்களுக்கும் அப்படியே மூடி இருக்கவேண்டும் என்று அல்லாஹுவிடத்திலே பிரார்த்தியுங்கள். மேலும், இம்மாதத்திலே, ஷைத்தான் விலங்கிடப்பட்டிருப்பான். அவன் என்றும் உங்களைத் தீண்டாமல் பாதுகாக்கும்படி அல்லாஹ்விடத்திலே பிரார்த்தியுங்கள்.

எனவே முஸ்லிம்கள் ரமளான் மாதத்தின் சிறப்பை உணர்ந்து, நல்லமல்கள் புரிவது அவசியமாகும். மாறாக ரமளான் மாதத்தினுடைய கடமைகளை நிறைவேற்றாது இருந்துகொண்டு, வீணான கேளிக்கைகளில் இந்தச் சங்கை நிரம்பிய மாதத்தைக் கழித்து விட்டால் அது இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் நிரந்தரமான தண்டனைக்கு வழிவகுத்துவிடும். இதனை முஸ்லிம்களாகிய நாம் உணர்ந்து செயல்படுவோமாக!

## சிந்திக்க சில வரிகள்...... ஸலாம் சொல்லிஅனுமதி கோரல்

நான் நபி(ஸல்) அவர்களிடம் (அவர்களின் இல்லத்திற்கு) சென்றேன். நான் ஸலாம் கூறவில்லை. (அனுமதி கோராமலும், ஸலாம் கூறாமலும் அவர்களின் வீட்டில் நான் நுழைந்து விட்டேன்) அப்பொழுது நபி(ஸல்)அவர்கள், நீர் திரும்பிச் செல்வீராக! "அஸ்ஸலாமு அலைக்கும் - நான் நுழையட்டுமா?" என்று கூறுவீராக! எனக் கூறினார்கள். (அபூதாவூது, திர்மிதி : கில்தா பின் ஹன்பல்(ரலி))

அனுமதி கோருபவரிடம் நீர் யார்? என்று கேட்டால், அவர் தம் பெயரை, விளக்கும் முறையில் கூறுவது ஸுன்னத் ஆகும். "நான்" என்றோ அல்லது அதுபோன்ற சொற்களையோ கூறுவது சரியல்ல.

நபி(ஸல்) கூறினார்கள்: அனுமதி கோருதல் மூன்று முறையாகும். மூன்று தடவைக்குள் உமக்கு அனுமதி அளிக்கப்பட்டால், அவ்வீட்டில் நுழைவீராக! இல்லையெனில் திரும்பிச் செல்வீராக! (புகாரி, முஸ்லிம்: அபூ மூஸா அல்அஷ்அரீ(ரலி))

நான் நபி(ஸல்) அவர்களிடம் சென்று அவர்களின் வீட்டுக் கதவைத் தட்டினேன். அப்பொழுது அவர்கள் "யார் அவர்?" என்று கேட்டார்கள். நான் "நான்" என்று கூறினேன். அதனை (அந்த பதிலை) வெறுத்தவர்களைப்போன்று, நபி(ஸல்) அவர்களும் "நான், நான்" என்று கூறினார்கள். (புகாரி, முஸ்லிம் : ஜாபிர்(ரலி))

# மணப்பெண் தேர்வு

- அபூஅப்துர்ரஹ்மான்

நபி(ஸல்) அவர்கள் இந்த சமுதாயத்திற்கு கூறிய ஒவ்வொரு செய்திகளும் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாம் ஆராய்ந்தால் வியந்து விடுவோம். கேட்பதற்கு சின்ன செய்தியாக தெரியும் அதன் கருத்து மிகவும் பரந்து விரிந்ததாக இருக்கும். இறைத்தூதராக இருப்பதால் எல்லா காலத்திற்கும், எந்த நாட்டிற்கும், எந்த சமூகத்;திற்கும், எந்த சூழ்நிலைக்கும் பொருந்துவதாக அமைவதை நாம் பார்க்க முடிகிறது.

அதில் இன்று நம் இஸ்லாமிய குடும்ப அமைப்பு சீரழிந்து போய் இருப்பதற்கு முக்கிய காரணம், நாம் நபி (ஸல்) அவர்களை பின்பற்றாததால் தான் இந்த சீரழிவு என்று நம்மால் நிச்சயமாக கூற முடியும்.

இன்றைய காலகட்டத்தில் இஸ்லாமிய சமூகத்தில் மலிந்து கிடக்கும் கலாச்சார சீரழிவை ஏட்டில் எழுதிவிட முடியாது. ஒழுக்கக்கேடு, மரியாதையின்மை, கல்வியின்மை, இணைவைப்பு, வீண்விரயம், பித்அத் (மார்க்கத்தின் பெயரால் நவீனம்) வட்டி, இன்னும் எத்தனை எத்தனையோ. இவை அனைத்திற்கும் முக்கிய காரணம் என்ன என்பதை பின்வரும் ஹதீது விவரிக்கின்றது.

ஒரு பெண் நான்கு விஷயங்களுக்காக மணமுடிக்கப்படுகிறாள்.

1) அவளது செல்வத்திற்காகவும்
2) அவளது வம்சத்திற்காகவும்
3) அவளது அழகிற்காகவும்
4) அவளது தீன்-மார்க்கத்திற்காகவும்

தீனுடைய பெண்ணைக் (திருமணம் செய்வது) கொண்டு நீர் வெற்றி பெற்றுக் கொள்வீராக என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம், அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி)

எத்தனை பொருத்தமாக நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று நன்றாக நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். வெறுமனே திருமணத்தை பற்றி மட்டும் இங்கு குறிப்பிடவில்லை, இதில் பல விஷயங்கள் அடங்கி உள்ளன. நான் மேலே சொன்ன அனைத்து பிரச்சனைகளுக்கும் இதில் தீர்வு இருக்கின்றது.

### முதலாவதாக செல்வம்:

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்று சொல்வார்கள். ஆனால் அது இன்று எல்லா பிரச்சினைகளுக்கும் தலைமை வகிக்கின்றது என்பதை நாம் பார்க்கிறோம். பணம் இருக்கின்றது என்பதற்காக யாருக்கு வேண்டுமானாலும் பெண் கொடுக்கவும், எடுக்கவும் செய்வதை நாம் இன்று நடைமுறையில் பார்க்கிறோம். எத்தனை ஒழுக்கம் கெட்ட பெண்ணாக, அல்லது ஆணாக இருந்தாலும் பணம் இருந்தால் திருமணம் நடந்து விடுகின்றது. பணம் மட்டுமே குறிக்கோளாக கொண்டு நடத்தப்படும் திருமணங்கள் கடைசிவரை அதை அடைவதற்கான எத்தனை வழிமுறைகள் உள்ளனவோ அத்தனையும் கையாளப்படுவதை இன்று நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

திருமண நிச்சயதார்த்தம் என ஒரு விருந்து, சீர்வரிசை, இதுவும் பல பிரிவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது அதாவது நாத்தனார் சீர், சம்பந்தன் சீர், தோழன் சாப்பாடு மற்றும் பணம், மாப்பிள்ளைக்கு தங்கம், தடால்-புடால் என ஆரம்பிக்கும் ஆடம்பர திருமணத்திற்கு ஒரு செலவு, அழைப்பு சாப்பாடு, தலை பெருநாள் பலகார செலவுகள் என ஒருவழியாக ஓய்ந்து ஒளிந்து போகின்ற போது தலைபிரசவம் வந்துவிட்டாலோ அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் பிறகு பெயர் சூட்டுவிழா, மாப்பிள்ளை பயணம் சென்று வந்தால் பாலும் பழமும் இப்படியாக செலவு பயணம் தொடர்ந்துக் கொண்டே செல்கிறது.

நகைச்சுவையாக சொல்வதுண்டு திருமணத்தன்று யார் பெண்ணின் தகப்பனார் என்று கேட்டால் வெள்ளை கைலி சகிதம் வெள்ளை சட்டையும், ஒரு தொப்பியும், கக்கத்தில் ஒரு பையும் (பேக்கும்) இருக்;கும் அத்துடன் பரப்பரப்பாகவும் பதற்றத்துடன் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருப்பார் அவ்வப்போது எல்லா செலவுகளுக்கும் பணம் கொடுத்துக் கொண்டேயிருப்பார் அவர்தான் பெண்ணின் தகப்பனார் என்பார்கள்.

தன் மகளை மணம் முடித்துக் கொடுக்க முடியாமல் அதற்காக குமர்காரியம் என்ற பெயரில் யாசகம் (பிச்சை) கேட்டு வரும் பெற்றோர் எத்தனைப்பேர்? இதற்கு யார் பொறுப்பு மஹர் கொடுக்காமல் வரதட்சணை பணத்திற்காக மணம் பேசும் பெற்றோர்கள் மற்றும் மணமகன்கள் அல்லவா?

நடத்தை சரியில்லாத ஆணாக, அல்லது பெண்ணாக இருந்தால் அந்த குடும்பம் எப்படி இருக்கும். ஆண்களை ஆடு, மாடுகளை வாங்குவதைப்போல இன்று பணம் உள்ள பெண்கள் மாப்பிள்ளையை வாங்குகிறார்கள். பணம் கொடுத்து மணந்த பெண் எப்படி கணவனுக்கு கட்டுப்படுவாள்? மனைவி கட்டுப்படவில்லை மணமகனின் பெற்றோரை மதிப்பதில்லை, உற்றார்-உறவினர்களை மதிப்பதில்லை எடுத்தெறிந்து பேசுகிறாள் என்ற குற்றச்சாட்டுகள் தினசரி வெளிவந்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இறைத்தூதரின் போதனைகளை உதாசீனப் படுத்தப்பட்டதால் ஏற்பட்டதன் விளைவு இன்று நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

### இரண்டாவதாக (வம்சம்) குலத்திற்காக:

இது மற்றொரு வகையான பிரச்சனைகளை ஏற்படுத்தும். குலப்பெருமை, அகம்பாவம், சோம்பேறித்தனம், போலி கவுரவம், வீண் ஆடம்பரம் இவற்றிற்கு குலப்பெருமைதான் காரணம். நான் யார் தெரியுமா காவன்னா-ராவன்னா குடும்பத்தை சேர்ந்தவன் என் வீட்டு கல்யாணம் மேளதாளத்துடன்தான் நடக்க வேண்டும் என்று சொல்லத்தான் அது பயன்படும்.

மேலும் படித்துவிட்டால் தன் படிப்பிற்கு தகுந்த வேலை கிடைக்கும் வரை சும்மாயிருந்தே காலத்தை களிப்பார்கள் வேறு எந்த வேலையும் செய்யமாட்டார்கள் கேட்டால் நம்ம குடும்பத்திற்கு அந்த வேலை எல்லாம் சரிவராது குடும்ப கவுரவம்னு ஒன்னு இருக்குல்ல என்பார்கள். பெண்கள் இந்த வம்ச பின்னணியை வைத்துக்கொண்டு வீண் பெருமை பேசிக்கொண்டு திரிவார்கள். தன் கணவனின் வரவு அறிந்து செலவு செய்யமாட்டார்கள். குடும்ப கவுரவம் என்று சொல்லி தேவையில்லாத செலவுகளை செய்ய வைப்பார்கள். சின்ன செலவுகளை பெரிதாக்கி விடுவார்கள். மேலே சொன்ன அனைத்து ஆடம்பர செலவுகளும் குடும்ப கவுரவத்திற்காக செய்வதுதான். அதிலும் தற்போது எல்லாம் பிறந்த நாள் கொண்டாட்டம் (பர்த்டே பார்ட்டி) செய்து பிறமத கலாச்சாரத்தை பின்பற்றி வருகிறார்கள்.

இறைவணக்கமான ஹஜ்ஜை செய்வதற்குகூட அழைப்பிதழ் என்ன, விருந்து என்ன ஹஜ்ஜுக்கு இரண்டு

லட்சம் என்றால் இந்த ஆடம்பர கூத்துக்கு, வழிஅனுப்பும் விழா? மற்றும் வரவேற்பு விழா? விருந்துடன் (விருந்தில்லாமல் எதுவுமில்லை) ஒரு லட்சம் அ(னா) வசியமாகிறது.

இவற்றிற்கெல்லாம் வருமானம் போதவில்லை என்றால் இருக்கவே இருக்கிறது நகைகள், அதனை பேங்கில் வைத்து வட்டிக்கு பணம் வாங்கி இவற்றை செய்கிறார்கள். வட்டி ஹராம் வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாது இந்த காரியங்கள் செய்கின்றவர்களை அல்லாஹ் சபிக்கின்றான், அல்லாஹ்வுடைய கோபத்தோடு இந்த வணக்கங்களை அல்லது நிகழ்ச்சிகளை செய்யவேண்டுமா என்று சொன்னால். நீ தருவாயா கடன் கொடுத்து உதவ முடியவில்லை மார்க்கம் பேச வந்துவிட்டாய் என்று அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

இறைவனும் இறைதூதரும் காட்டித்தந்த வழியில் நாம் நம் வாழ்க்கையை நடத்தினால் வரவு அறிந்து செலவு செய்தால் நாம் ஏன்? கடன் வாங்க வேண்டும், வட்டிக்கு போக வேண்டும். இதை இந்த சமுதாய மக்களாகிய நாம் வெகு சீக்கிரத்தில் உணர வேண்டும், காலத்தே உணராமல் பிற்படுத்தினால் மௌத் முந்திவிட்டால் என்ன பதில் நாம் தயாரித்து வைத்துள்ளோம், சிந்திக்க வேண்டும்.

**மூன்றாவதாக அழகு:**

மனிதனை குடும்ப வாழ்க்கையில் சந்தோஷப்படுத்த வேண்டிய இந்த அழகு சந்தேகப்படுத்தி விடுகிறது. இதனால் என்ன ஆகிறது குடும்பத்தில் பூகம்பம் ஏற்பட்டு விடுகிறது வாழ்வில் அழகை விரும்பும் நாம் இஸ்லாம் காட்டித்தந்த முறைப்படி ஹிஜாபை பேண சொல்ல வேண்டும் ஆனால் நாம் அதை கண்டுக்கொள்வதே இல்லை. நாம் சில நாட்கள் அல்லது மாதங்கள் மனைவி மக்கள் மற்றும் குடும்பத்தாருடன் இருந்துவிட்டு தேவைக்காக பொருளாதாரம் தேட போய்விட்டால். அந்த தனிமை அல்லது இறையச்சமில்லாத தவறான சிந்தனையுள்ள தீய எண்ணமுள்ள ஆண்கள்; பார்க்கும் போது உள்ளத்தில் கெட்ட எண்ணம் ஏற்பட்;டு வெட்கமின்மையும், கள்ளத்தொடர்பும் ஏற்பட்டு தன் வாழ்கையையும் இழந்து கணவனுடைய வாழ்க்கையையும் சேர்த்து பாழாக்கி விடுகிறார்கள்.

மேலும் அந்த அழகு என்பது ஒரு குறிப்பிட்ட காலம் தான் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கோடித்துணி ஒரு வெள்ளைக்கு குமரிப்பெண் ஒரு பிள்ளைக்கு என்பார்கள். மனித இயல்பும் எத்தனை அழகான பெண்ணை திருமணம் செய்தாலும் அதைவிட அழகான பெண்ணை பார்த்தால் தன் மனைவி அழகாக தெரியாது தவறு செய்து விடுவான். இந்த தவறுகளுக்கு இன்றைய செல்போன்களின் பங்கை நாம் இங்கு சொல்லித்தான் ஆகவேண்டும்.

நவீன ஷைத்தான் என்று சொல்ல வேண்டும். பெண்களின் மானத்தோடு விளையாடும் வக்கிர புத்திக் கொண்ட ஆண்கள் (கயவர்கள்) மிஸ்கால்கள் மற்றும் ராங்நம்பர் கொடுத்தும் பேச்சை துவங்கி நாளடைவில் பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டு தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். தன் அருமை மனைவி கேட்டும், கேட்காமலும் வாங்கி கொடுத்த வீடியோ போன்கள் பழுதுபார்க்;க செல்லும்போது இன்று நம் பெண்களின் மானத்தோடு விளையாடப்படுகிறது. நாம் அழகை விரும்புகின்றோம் ஆனால் அதனால் ஏற்ப (டப்போகும்)டும் விபரீதத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அழித்துவிட்ட படங்களைகூட (ரெக்கவர் டெலிட் பைல்) என்ற சாப்ட்வேர் மூலம் அதை எடுத்து நம் பெண்களின் படங்களை துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

செல்போன்களை எப்படி கையாள வேண்டும் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும் அவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கவேண்டும் வீடியோ போன்களை பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்காமல் இருக்க வேண்டும்.

நான் மேலே சொன்னவை என்னுடைய சின்ன அறிவிற்கு தெரிந்தவை இன்னும் எத்தனையோ விஷயங்கள் மற்றும் விபரீதங்கள் உள்ளன அல்லாஹ்வும் அவனது தூதரும் மிக நன்கு அறிந்தவர்கள்.

**நான்காவதாக மார்க்கம்:**

அல்லாஹுஅக்பர் எத்தனை உண்மையான வார்த்தை என்று எண்ணிப்பாருங்கள். மார்க்கம் உள்ள பெண்ணை தேர்வுசெய் என்று மட்டும் சொல்லவில்லை, தேர்வு செய்து வெற்றி பெற்றுக்கொள் என்கிறார்கள் நம்முடைய தலைவர் முஹம்மது(ஸல்) அவர்கள். வாழ்க்கையில் வெற்றி பெறத்தான், நிம்மதிப் பெறத்தான், அமைதிப் பெறத்தான் திருமணம் செய்கிறோம். ஆனால் அந்த நிம்மதி இல்லை என்றால்? காரணம் நபிகளாரின் போதனைகளை பின்பற்றாததுதான். இன்றைக்கு எத்தனை குடும்பங்கள் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையை பின்பற்றாமல் அவதிப்படுகிறார்கள்.

மார்க்கத்துடன் கூடிய செல்வம் இருந்தால் அது வரவேற்கக்கூடியதே, அதுபோன்று மார்க்கத்துடன் கூடிய வம்சம் இருந்தால் அதுவும் வரவேற்கக்கூடியதே, மார்க்கத்துடன் கூடிய அழகு இருந்தால் அதுவும் வரவேற்கக்கூடியதே. ஆனால் இன்று மார்க்கம் கணக்கில் எடுக்கப்படாத ஒன்றாகி விட்;டது. பெண்ணுக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்கிறோம், அவர்கள் என்ன கொடுப்பார்கள் என்று பிறரிடம் விசாரிக்கிறோம் நல்ல இடமா? என்று விசாரிப்பதெல்லாம் கொடுக்கல் வாங்கல் பற்றித்தானே தவிர நடத்தை எப்படி, மார்க்கம் எப்படி, தொழக்கூடிய பெண்ணா? அல்லது தொழக்கூடிய மாப்பிள்ளையா? அதெல்லாம் முக்கியமே இல்லை என்றாகி விட்டது.

அப்படி மார்க்கம் தெரிந்த யாராவது நீங்கள் எதுவும் பெண்ணுக்கு செய்ய வேண்டாம். மார்க்கமுள்ள பெண்தான் வேண்டும். தொழக்கூடிய பெண்ணா, என்ன ஓதி இருக்கிறது என்று விசாரித்தால் மாப்பிள்ளைக்கு ஏதோ குறையிருக்கிறது அதனால்தான் எதுவும் வேண்டாம் என்று கூறி நம் பெண்ணின் தலையில் கட்டிவிட பார்க்கிறார்கள் என்ற கேவலமான கண்ணோட்டத்தில் பார்க்க தொடங்கி விடுகிறார்கள். மாப்பிள்ளை தாடி வைத்திருந்தால் தாடி வைத்த மாப்பிள்ளைக்கு பெண் தரமாட்டோம் என்கிறார்கள். மாலைபோடுவது, தாலிகட்டுவது பிறமத கலாச்சாரம் கூடாது என்று சொன்னால் அந்த வீட்டார்களும், அந்த ஊர் ஜமாத்தார்களும் நிரந்தரமாக இப்படிப்பட்ட இஸ்லாமிய திருமணத்திற்கு தடையாகி விடுகிறார்கள்.

அல்லாஹ் குர்ஆனில் நம்மை மனித சமுதாயத்திலேயே மேன்மைமிக்க சமுதாயம் என்று கூறுகின்றான். ஆனால் நாம் ஏன் பிற சமுதாயத்தால் இழிவுபடுத்தப்படுகிறோம் என்றால் காரணம் நாம் நன்மையை ஏவுவதுமில்லை தீமையை தடுப்பதுமில்லை அதோடு மட்டுமல்லாமல் நாம் அல்லாஹ்வை அஞ்சாமல், இறைவனின் தண்டனைக்கு பயப்படாமல் எல்லா தவறுகளையும் துணிவோடு செய்து கொண்டிருக்கிறோம்.

நாம் மார்க்கமுள்ள பெண்ணை அல்லது மாப்பிள்ளையை தேர்வு செய்தால் நிச்சயமாக பணம், வம்சம், அழகு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம்

வெற்றி பெறமுடியும். மார்க்கமுள்ள பெண் பணத்தை வீண்விரயம் செய்யமாட்டாள், அல்லாஹ்வுக்கு அஞ்சுவாள் நாளை மறுமையில் இறைவனிடம் நம் பொறுப்புகள் பற்றி விசாரிக்கப்படுவோம் என்று குர்ஆன், ஹதீது உள்ளது என்பதை அறிந்து நடந்துக் கொள்வாள்.

ஒரு பெண் அந்த குடும்பத்தின் கணவனின் வீட்டையும் அவனின் பொருளையும் பாதுகாப்பாள் தன்னையும் பாதுகாத்துக் கொள்வாள். எத்தனை உயர்ந்த வம்சமாக இருந்தாலும் அல்லாஹ்வுக்கு பயந்து வரவு அறிந்து தேவைக்கு அதிகமாக கணவனின் செல்வத்தை செலவு செய்யமாட்டாள். மார்க்கமுள்ள பெண் கணவன் இல்லாத நேரத்தில் தன்னையும் தன் கற்பையும் பாதுகாத்து மஹரம் (தகப்பன், சகோதரன், உடன்பிறந்தோர்) அல்லாத மற்றவர்களிடம் தேவைக்கு அதிகமாக பேசாமல் ஹிஜாபை பேணுவாள். அதன் மூலம் தனக்கும் தன் கணவனுக்கும் நிம்மதியை ஏற்படுத்தி மார்க்கத்தை பேணிநடந்து இந்த உலகிலும் மறுமையிலும் நம்மை வெற்றியடைய செய்வாள். மார்க்கமுள்ள பெண்ணை தேர்வு செய்ய அல்லாஹ் நமக்கும் நம் சந்ததிகளுக்கும் அருள் புரிவானாக

# செய்தித் துளிகள்

## சர்வதேச அளவில் சாதித்த சல்மா ஃபாரூக்

நாகை மாவட்டம் திட்டச்சேரியை சேர்ந்தவர் முஹம்மது பாரூக். இவர் செசல்ஸ் தீவில் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் நிறுவன உரிமையாளராக உள்ளார். இவரின் மகள் சகோதரி சல்மா செசல்ஸ் தீவில் உள்ள சர்வதேச பள்ளியில் படித்து வருகிறார்.

சர்வதேச அளவில் 100 நாடுகளை சேர்ந்த 2000 பள்ளிகளின் மாணவ, மாணவிகள் பங்கேற்ற 'இண்டர்நேசனல் ஜெனரல் சர்டிபிகேட் ஆப் செகண்டரி எஜிகேசன்ஸ்' என்ற தேர்வு கடந்த ஆண்டு (2009) அக்டோபர் மாதம் நடைபெற்றது. இதனுடைய சர்வதேச முடிவுகள் சில தினங்களுக்கு முன் வெளியானது.

இதில் கலந்துக்கொண்ட சகோதரி சல்மா சர்வதேச அளவில் மூன்று பாடங்களில் முதல் பத்து இடங்களுக்குள் வந்து சாதனை படைத்துள்ளார்.

ஆங்கில இலக்கிய பாடப்பிரிவில் சல்மா ஃபாரூக் சர்வதேச அளவில் முதலிடத்தை பெற்றுள்ளார். மேலும் உயிரியல் பாடத்தில் மூன்றாம் இடத்தையும் புவியியல் பாடத்தில் ஒன்பதாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இன்ஃபர்மேசன் கம்யூனிகேசன் மற்றும் புவியியல் பாடங்களில் செசல்ஸ் தீவில் சிறப்பிடத்தையும் இயற்பியல் பாடத்தில் அதீத சாதனைக்கான விருதையும் பெற்றுள்ளார்.

பத்து பாடங்களிலும் 95 சதவீதத்திற்கு மேல் பெற்றுள்ளதால் இவருக்கு 'ஏ ஸ்டார் (A-star)' என்ற விருதும் வழங்கப்பட்டுள்ளது.

*Source: www.sessonsali.blogspot.com*

## சவூதி அரேபிய விமான நிலையங்களில் புகைபிடிக்க தடை

சவூதி அரேபியாவில் உள்ள விமான நிலையங்களில் புகைபிடிக்கத் தடை விதிக்க வேண்டும் என்று 150 உறுப்பினர்களை கொண்ட ஷுரா கவுன்சிலின் பரிந்துரைக்கு அந்நாட்டு அரசர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இத்தடையை மீறி புகைபிடிப்பவர்களுக்கு விமான மற்றும் போக்குவரத்து ஆணையம் அபராதம் விதிக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சவூதி அரேபியாவில் புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. அந்நாட்டில் 60 லட்சம் பேர் புகைப் பழக்கத்திற்கு ஆளாகி உள்ளனர். அத்தோடு புகையிலை மற்றும் சிகரெட் நுகர்வில் சவூதி அரேபியா உலகிலேயே ஆறாவது இடத்தில் உள்ளது. 10 சதவீத பெண்கள் மற்றும் 19.3 சதவீத இளைஞர்கள் சிகரெட் பழக்கத்திற்கு ஆளாகி உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நீண்ட நேரம் கம்ப்யூட்டர் பார்ப்பவர்களுக்கு தூக்கம் பறிபோகும்

கம்ப்யூட்டர் மற்றும் ஐபாட் திரையை அதிக நேரம் பார்ப்பவர்களுக்கு நிம்மதியான தூக்கம் வருவதில்லை என அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கம்ப்யூட்டர் திரையை நீண்ட நேரம் பார்ப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு ஒன்றை நடத்தினர். அதில் கம்ப்யூட்டர் லேப்-டாப் ஐபாட் திரைகளை நீண்ட நேரம் பார்ப்பவர்களுக்கு நாளடைவில் தூக்கம் வருவதில் சிக்கல் ஏற்படுவதாக தெரிய வந்தது. கம்ப்யூட்டர் திரையிலிருந்து வெளிப்படும் அதிக சக்தி வாய்ந்த ஒளிக்கற்றைகள் மனித மூளையின் வழக்கமான செயல்பாடுகளை பாதிப்பதும் தெரிய வந்தது. மனித மூளை காலை சூரிய வெளிச்சம் வந்தவுடன் இயங்க ஆரம்பித்து இரவு சூரிய ஒளி மங்கியவுடன் செயல்பாடுகளை குறைத்துக் கொள்ளும் வகையில் செயல்படுகிறது. இதை மெலட்டோனின் என்ற ஹார்மோன் கட்டுப்படுத்துகிறது.

இது அறிவியல் விந்தையாக கருதப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் கூற்றுப்படி கம்ப்யூட்டர் போன்ற மின்னணு சாதனங்களிலிருந்து வெளிப்படும் நீல நிற வெளிச்சம் மெலட்டோனின் ஹார்மோன் செயல்பாட்டை பாதித்து தூக்கத்தை கெடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

மனிதனின் கண்கள் நீல நிறத்தை பகல் பொழுதாக எடுத்துக் கொள்ளும் தகவமைப்பை பெற்றுள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர். இரவில் நிம்மதியாக தூங்க நல்ல புத்தகங்களை படிப்பது சிறந்த வழி. தொடர்ந்து கம்ப்யூட்டர் பார்க்கும்போது அதிலிருந்து வரும் வெளிச்சத்தை கொண்டு மெலட்டோனின் ஹார்மோன் இரவில் தூக்கம் வருவதை தவிர்த்து விழிப்புடன் இருக்க மூளையை தூண்டும். இதனால் தூக்கம் வருவதில் நாளடைவில் சிக்கல் எழும் என நார்த்வெஸ்ட் பல்கலைக்கழக மூளை அறிவியல் துறை பேராசிரியர் பில்லீஸ் சீ தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸில் புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாசலை அந்நாட்டு பிரதமர் திறந்து வைத்தார்.

பிரான்ஸ் தலைநகரமான பாரிஸிற்கு சற்று தொலைவில் உள்ள பிரதேசமொன்றில் புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாசல் ஒன்றை அந்நாட்டு பிரதமர் திறந்து வைத்தார்.

இப்பள்ளிவாசலில் ஒரே நேரத்தில் 2500 பேர் தொழக்கூடிய வசதியை கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வட ஆபிரிக்கவை சேர்ந்தவர்களே பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

பிரான்ஸ் நாட்டின் பிரதமர் ஒருவர் அந்நாட்டு முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றை திறந்து வைத்தது இதுவே முதற்தடவையாகும்.

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 6:11

## போட்டிக்குரிய கேள்விகள்

**1. ரமளான் நோன்பு எதற்காக கடமையாக்கப்பட்டதாக அல்லாஹ் தன் குர்ஆனில் (2:183-ல்) குறிப்பிடுகிறான்**

a. பட்டினி கிடந்து பசியை உணர்வதற்காக

b. இறையச்சமுடையோர் ஆவதற்காக

c. பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக

**2. ஒரு நோன்பாளி தனது உணவையும் பானத்தையும் விட்டுவிடுவதில் அல்லாஹ்விற்கு எந்த தேவையுமில்லை இந்த செயலை செய்கின்ற வரை**

a. கெட்டப் பேச்சுக்களையும், செயல்களையும் செய்கின்றாரோ

b. இரவு தொழுகையை தொழுகாமல் இருக்கின்றாரோ

c. நன்மையை ஏவி தீமையை தடுக்காமல் இருக்கின்றாரோ

**3. நோன்பாளி எந்த உணவை கொண்டு நோன்பு திறப்பது சிறந்தது – நபிவழி**

a. பேரித்தப் பழத்தை கொண்டு அது கிடைக்காவிட்டால் தண்ணீரைக் கொண்டு

b. தண்ணீரைக்கொண்டு அது கிடைக்காவிட்டால் பலகாரங்களைகொண்டு

c. பேரித்தப்பழத்தைகொண்டு அது கிடைக்காவிட்டால் ஜூஸ் போன்றவற்றைக் கொண்டு

**4. நோன்பாளி எந்த வாசலின் வழியாக சுவனத்தில் செல்வார்**

a. பாபுஸ்ஸலா b. பாபுர்ரய்யான் c. பாபுமுஹம்மது

**5. ஒரு நோன்பாளியின் நோன்பு எந்த காரணத்தால் முறிந்து விடும்**

a. நோன்பாளி பகல்பொழுதில் பல்துலக்கினால்

b. ஏதாவது பானம் குடித்தால்

c. தூக்கத்தில் தானாக இந்திரியம் வெளியானால்

**அறிவுப் போட்டி - 6:10 க்கான பரிசு பெறுபவர் : A.மலிக் ஜான் – 056 525 7648**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

### அறிவுப் போட்டி - 6:10 க்கான விடைகள்

1) b. ஹன்லலா(ரலி)

2) b. ஸல்மான்(ரலி)

3) c. அபூஹுரைரா(ரலி) மற்றும் ஆயிஷா(ரலி)

4) c. சுஹைப் ரூமி(ரலி)

5) c. உஸ்மான்(ரலி)

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

*தொடர் - 39* — *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A*

**اَللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الثَّبَاتَ فِي الْأَمْرِ وَالْعَزِيمَةَ عَلَى الرُّشْدِ وَأَسْأَلُكَ شُكْرَ نِعْمَتِكَ وَحُسْنَ عِبَادَتِكَ وَأَسْأَلُكَ قَلْبًا سَلِيْمًا وَلِسَانًا صَادِقًا وَأَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا تَعْلَمُ وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا تَعْلَمُ وَأَسْتَغْفِرُكَ لِمَا تَعْلَمُ. (نسائي)**

யா அல்லாஹ்! (சகல நல்ல) காரியங்களில் நிலைத்திருப்பதையும், நேர்வழியில் உறுதியையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன். இன்னும் உன் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்திடவும் உன்னை அழகிய முறையில் வணங்கிடவும் நான் உன்னிடம் கேட்கின்றேன். தூய்மையான உள்ளத்தையும் உண்மை உரைக்கும் நாவையும் நான் உன்னிடம் கேட்கின்றேன். உனக்குத் தெரிந்த நலவுகளை (எல்லாம்) கேட்கின்றேன். உனக்குத் தெரிந்த எல்லா கெடுதிகளிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். உனக்குத் தெரிந்த (எல்லாப்) பாவங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். (நஸாயி)

**اَللَّهُمَّ أَلْهِمْنِيْ رُشْدِيْ، وَقِنِيْ شَرَّ نَفْسِيْ. (ترمذي)**

யா அல்லாஹ்! எனக்கு நேர்வழியைக் காட்டுவாயாக! என் ஆத்மாவின் கெடுதிகளிலிருந்து என்னைக் காத்தருள்வாயாக! (திர்மிதி)